**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

OS 158/2020

24.03.2026.

PW- 2

**வா.சா.2. மதிவாணன், த/பெ.ராமையா அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எங்கள் கிராமத்திற்கு பின்னாடி தான் வழக்கு சொத்து அமைந்துள்ளது என்றாலும் நான் குடியிருக்கும் தாலுக்காவும் வழக்கு சொத்துள்ள தாலுக்காவும் வெவ்வேறு என்றாலும் - சரிதான். பிரதிவாதிகள் எனக்கு உறவினரா என்றால் - இல்லை. தெரியும். பிரதிவாதிகளை எப்படி தெரியும் என்று குறிப்பிட்டு என்னுடைய பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளனோ என்றால்- இல்லை. நான் விவசாயம் செய்யும் 10 ஏக்கர் நிலம் எந்த ஊரில் உள்ளது என்றும் அதன் சர்வே எண்ணும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான். ஆக்கிரமிப்பு 5 அடி என்றும் 8 அடி என்றும் நான் கூறியுள்ளது தொடர்பாக அந்த இடத்தை நான் அளந்து பார்த்தேனா என்றால் - இல்லை. 8 அடி வடகிழக்கு மூலையில் வாதிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து செப்டிக் டேங்க் கட்டிவிட்டார்கள் பேசிக்கொண்டதை நான் கேட்டதாக எனது நிருபண வாக்குமூலத்தில் இல்லை என்றால் - சரிதான். வழக்கு சொத்தின் புல எண்ணை கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் - இல்லை. 28.04.2020 ம் தேதிக்கு முன்னிட்டும் பின்னிட்டும் பிரச்சினை நடந்ததாக சொல்லியுள்ள நிலையில் எந்த தேதி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான். 28.04.2020 ல் பிரச்சினை நடந்ததை நான் பார்த்ததாக குறிப்பிட்டு பிரமாண பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் - சரிதான். நான் எதையும் பார்க்கவில்லை என்றாலும் வாதி பிரச்சினை நடந்த தேதியை வாதி சொன்னதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் - சரியல்ல. வழக்கு சொத்தை நான் நேரடியாக பார்த்துள்ளேன். அதில் கட்டப்பட்டுள்ள செப்டிக் டேங்க் ரொம்ப பழசு என்றால் - 2020 ல் கட்டிவிட்டார்கள். செப்டிக் டேங்க் கட்டியதை நான் பார்த்தேனா என்றால் - கட்டியதை பார்க்கவில்லை கட்டியபின்பு பார்த்தேன். கட்டியபின்பு பார்த்ததை நான் பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான். பிரதிவாதியின் வீட்டிற்கு பின்புறம் மரங்கள் உள்ளது. அவைகள் இயற்கையாக வளர்ந்தவை என்றால் - அதுபற்றி தெரியாது. எனது குடும்ப சொத்திற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். எனது பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ளது போன்று எந்த சம்பவத்தையும் நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் நான் அந்த வழியாக அடிக்கடி செல்வதாக சொல்லியுள்ளதும் தவறு என்றால் - சரியல்ல. எந்த வாகனத்தில் அவ்வாறு அடிக்கடி செல்வேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான். எனக்கு வழக்கு சொததின் அமைப்பு பற்றி தெரியாது என்றாலும் வழக்கை பற்றிய விவரம் தெரியாது என்றாலும் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் - சரியல்ல. செப்டிக் டேங்க் கட்டியதை பின்னிட்டு பார்த்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.